1972 டிசம்பர் 15]

கோவில்பட்டி மண் பரிசோதனை நிலையம்

* 206 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியில் உள்ள மண் பரிசோதனைக் கூடத்தில் கடந்த ஆண்டில் எத்தனை ஆய்வுகள் நடத்தப் பட்டன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டியில் உள்ள மண் பரிசோதனைக் கூடத்தில் கடந்த ஆண்டு 34,138 மண் மாதிரிகளும், 214 நீர் மாதிரிகளும் ஆய்வு செய்யப்பட்டன.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : கோவில்பட்டியில் அமைந் திருக்கிற மண் ஆராய்ச்சி நிலையம் ஜில்லாவில் ஒரு கோடியில் அமைந் திருப்பதால் மற்றப் பகுதிகளிலும் இதனுடைய பிரிவு விஸ்தரிக்கப் படுமா? அதோடு, தமிழகத்தில் எங்கெங்கே இம்மாதிரி ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழகத்தில் கோயம் புத்தூர், ஆடுதுறை, கோவில்பட்டி, கடலூர், மேலாளத்தூர், காஞ்சி புரம், மதுரை, சேலம், பரமக்குடி, திருச்சி, ஊட்டி ஆகிய 11 இடங் களில் இந்த மண் பரிசோதனை நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. மேலும் பல திறப்பதற்கு, கூடுமான வரையில் ஒவ்வொரு மாவட்டத் திற்கும் ஒன்று திறக்க வேண்டும் என்று அரசு அக்கறை கொண்டிருக் கிறது. இப்பொழுதே அதற்காகத்தான் ஆய்வுக் கூடங்கள் ஏற் படுத்தப்படுகின்றன. 1971-ஆம் ஆண்டு இந்திய அரசினால் அளிக்கப் பட்ட நடமாடும் மண் ஆய்வு ஊர்த்தி, திருச்சி, தஞ்சை மாவட்டங் களில் பணியாற்றி வருகிறது. அண்மையில் மத்திய அரசினால் அளிக்கப்பட்ட மற்றொரு மண் ஆய்வு ஊர்தி திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டியில் விரைவில் பணியைத் துவங்க இருக் கிறது. மேலும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

THIRU B. VENKATASWAMY : Sir, in Dharmapuri district there is no soil testing unit. I want to know whether the mobile unit would be diverted to Dharmapuri District also ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தர்மபுரி மாவட்டத்திற்கு என்று ஒரு தனி மண் ஆராய்ச்சிக் கூடம் நிறுவுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுவரையில் தாமதம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இப்பொழுது சேலத்தோடு தர்மபுரி மாவட்டத்தை இணைத்திருக்கிறோம். விரைவிலே துவக்குவதற்கு வேண்டிய செயற்குறிப்பு இருக்கிறது.

மதுரையில் கதர் இயக்குநர் அலுவலகம்

* 207 வின.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மண்டல காதி இயக்குநர் அலுவலகக் கட்டடத்திற்கு மாதம் எவ்வளவு வாடகைத் தரப்படுகிறது ?

(இ) நகரின் மத்தியில் இருந்த இவ்வலுவலகத்தை தற்போது உள்ள இடத்திற்கு மாற்றக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) மாதம் ஒன்றுக்கு ரூ. 250 கொடுக்கப்படுகிறது.

(இ) முன்னாள் இவ்வலுவலகம் இயங்கிவந்த கட்டடம் பல விதங்களில் வசதிக் குறைவாக இருந்தது. எனவே, தற்போதைய இடத்துக்கு அலுவலகம் மாற்றப்பட்டது.

திரு. கே. எ. வகாப் : இப்பொழுது இருக்கிற காதி விற்பனை நிலையம் தொலைவிலே இருக்கிறது, அதனால் விற்பனை குறைந்திருக்கிறது என்று கூறப்படுகிறது. விற்பனையை அதிகப்படுத்துவதற்கு, மக்கள் அதிகமாக இருக்கிற கடைவீதிப் பகுதியிலே அது அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலில் இருந்த இடம் மக்கள் குறைவாக வருகிற குறுகலான சந்துக்குள்ளே இருந்தது. அங்கு வாகனங்கள் வருவதற்கும், அதிகமாக மக்கள் வருவதற்கும் வசதியில்லாமல் இருந்தது. அதிலே இருந்த இட வசதி 800 சதுரடிகள்தான். முதலில் மாதம் ரூ. 220 வாடகை கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது உள்ள இடத்தில் 1,700 சதுர அடிகள் இட வசதி இருக்கிறது. பொதுமக்கள் வந்து வாங்குவதற்கு வசதியான பெரிய கட்டடம். அலுவலர்கள் இருப்பதற்கும் வசதியான கட்டடம். மாதம் ரூ. 250 வாடகை கொடுக்கப்படுகிறது.